Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. | } | |
| Miscellaneous | .. .. | } | |
| Preliminary Register | .. .. | } | **S.C. 297/2022** |
| Sessions | .. .. | } | |
| | | } | Prosecution – **PW9** |
| Deposition of witness for | | } | Defence – |
| | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | செல்வி |
| Father Name | : | ஆறுமுகம் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | உதவி பொறியாளர், மின்சார வாரியம் |
| Religion | : | |
| Age | : | 41 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.11.2025.

<u>(எதிரி ஆஜர். )</u>

**முதன்மை விசாரணை:–**

நான் தற்போது மண்டபம் மின்வாரிய அலுவலகத்தில் உதவி பொறியாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2021ம் வருடம் தேவிப்பட்டினம் மின்வாரிய அலுவலகத்தில் உதவி பொறியாளராக பணிபுரிந்தபோது தேவிப்பட்டினம் காவல் நிலைய ஆய்வாளர் 11.08.2021ம் தேதி மதியம் 12.00 மணியளவில் என்னை அழைத்து விசாரித்தார். கடந்த 17.07.2021ம் தேதி 19.00 மணியிலிருந்து 18.07.2021 05.00 மணி வரை மின்விநியோகம் இருந்ததா என கேட்டார், நான் இருந்தது என்று கூறினேன். நான் வழங்கிய கடிதம் **அ.சா.ஆ.7.** ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–

காவல் ஆய்வாளர் அ.சா.ஆ–7 கடிதத்தை வாய்மொழியாக கேட்டதின் அடிப்படையில் கொடுத்தேனா அல்லது எழுத்து மூலமாக கேட்டதின் அடிப்படையில் கொடுத்தேனா என்றால் எழுத்து மூலமாக கேட்டதின் அடிப்படையில் கொடுத்தேன். என்னிடம் மின்தடை ஏற்பட்டிருந்ததா, மின்விளக்குகள் எரிந்து கொண்டிருந்ததா என கேட்டாரா என்றால் மின்தடை இருந்ததா என்று மட்டும் கேட்டார். நான் வழங்கிய அ.சா.ஆ.7 கடிதத்தில் மின்விளக்குகள் எரிந்து கொண்டிருந்தது என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மாரியம்மன் கோவிலுக்கு மின்சார இணைப்பு வழங்கப்பட்டுள்ளதா என்றால் வழங்கப்பட்டுள்ளது. மாரியம்மன் கோவிலுக்கு மின்சார இணைப்பு வழங்கப்பட்டுள்ளது சம்மந்தமாக, யார் பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்றோ நான் கடிதத்தில் குறிப்பிட்டு கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனக்கு கீழ் லைன்மேன் பணிபுரிகிறார்கள் என்றால் சரிதான். அவர்கள்தான் மின்விளக்குகள் அன்றாடம் எரிகிறாதா, இல்லையா என்று பார்ப்பார்கள் என்றால் சரிதான். அவர்களுக்குத்தான் மின்விளக்குகள் எரிந்ததா, இல்லையா என்பது தெரியும் என்றால் தெரு விளக்கு எரிவதற்கும் எங்களுக்கும் சம்மந்தம் இல்லை. தெருவிளக்குகள் எரிந்ததா இல்லையா என்பதை எங்கள் அலுவலக ஊழியர்கள் கண்காணிப்பதில்லையா என்றால் கண்காணிப்பதில்லை. வழக்கு சம்பவம் நடைபெற்று எத்தனை நாட்கள் கழித்து விசாரித்தார் என்றால் ஞாபகமில்லை. நான் ஆய்வாளர் கேட்டுககொண்டதிற்கிணங்க லாக்புக்கை பார்க்காமல் சான்றிதழ் வழங்கியுள்ளேன் என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.